# கோறளைப்பற்று வடக்குப் பிரதேசத்திற்கு உட்பட்ட ஆரம்பப் பிள்ளைப் பருவச் சிறார்களுக்குக் கற்றல் வாய்ப்பை வழங்குவதில் முன்பள்ளிகள் எதிர்நோக்கும் சவால்கள்: ஓர் ஆய்வு

**நிதிஹரன் க.**[114]

**ஆய்வுச் சுருக்கம்**

கோறளைப்பற்று வடக்குப் பிரதேசத்தில் முன்பள்ளிகளின் செயற்பாடுகள் எத்தகைய சவால்களை எதிர்நோக்கின்றன என்பதையும் முன்பள்ளிகளின் தற்போதைய நிலையையும் அறிவதாகவே இவ்வாய்வு அமைந்துள்ளது. ஆய்வுப் பிரதேசமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள கோறளைப்பற்று வடக்கு (வாகரை) பிரதேசம் அமைந்துள்ளது. தரவுகள் சேகரிப்பதற்கான மாதிரி எடுத்தலாக 20 முன்பள்ளிகள் தெரிவு செய்யப்பட்டன. இம்முன்பள்ளிகளின் ஒவ்வொரு ஆசிரியர் வீதம் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து மூலம் தரவுகள் பெறப்பட்டன. அத்துடன் இப்பிரதேச முன்பள்ளி கல்வி உத்தியோகத்தருடனான நேர்முகம்காணல் மூலமும் தரவுகள் பெறப்பட்டு இவ்வாய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தரவு சேகரிப்பு முறையாக ஆசிரியர்களுக்கான வினாக்கொத்தும் முன்பள்ளி உத்தியோகத்தருடான நேர்முகம் காணலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. தரவுப் பகுப்பாய்வு நுட்ப முறைகளாக பண்புசார் அணுகுமுறை, அளவுசார் அணுகுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளன. பண்புசார் அணுகுமுறையில் தரவு பகுப்பாய்வு செய்யும் போது சேகரிக்கப்பட்ட தரவுகளில் இருந்து பொதுவாகக் கருப்பொருளைக் கண்டறிதலும் இனங்காணப்பட்ட அம்சங்களிடையே தொடர்புகளை உருவாக்குதலும் இடம்பெறும். அளவுசார் அணுகுமுறையிலே சதவீதம் கணித்தல், தரவுகளை அட்டவணைப்படுத்தல், போன்ற விடயங்கள் முக்கியம் பெறுகின்றன. தரவுப் பகுப்பாய்வின் போது இவ்விரு முறைகளும் பயன்படுத்தப்படுகின்றன. பிரதான பகுப்பாய்வு நுட்பங்களாகத் தரவுகளை அட்டவணைப்படுத்தல், நூற்றுவீதம் கணித்தல் என்பன இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வின் முடிவில் முன்பள்ளிகளின் வளர்ச்சியில் பெற்றோர்களின் பங்களிப்பு என்பது போதுமானதாக அமைந்திருக்கவில்லை என்ற விடயம் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கான காரணம் பெற்றோர்கள் படிப்பறிவு குறைந்தவர்களாகக் காணப்படுகின்றமையும் கற்றலுக்கான வாய்ப்புக்கள் அண்மித்ததாக அமையாமையுமாகும். 56% ஆனோரின் கருத்துப்படி பெற்றோரின் பங்களிப்பு போதுமானதாக அமைந்திருக்கவில்லை என்பதையே வெளிப்படுத்தியுள்ளனர். அத்துடன், அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு காணப்பட்டாலும் நிரந்தரமாக நீடித்து செயற்படத்தக்க வகையில் அமைந்திராமை ஒரு குறைபாடாகும். இது தொடர்பில் 78% ஆனோரின் கருத்துப்படி இவற்றின் பங்களிப்பு போதுமானதாக அமைய வில்லை என்பதையே வெளிப்படுத்தியுள்ளனர். அத்துடன் அரசசார்பு நிறுவனங்களின் பங்களிப்பும் திருப்திகரமாக அமைந்திருக்கவில்லை என்பது 72% ஆனோரின் கருத்தாகும். முன்பள்ளி உத்தியோகத்தரின் கருத்துக்கள் மூலம் அப்பிரதேசத்தில வாழும் மக்களின் அடிப்படை வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் போது இப்பிரதேச முன்பள்ளிக் கல்வி தொடர்பிலான மாற்றங்களை இனங்காண முடியும் என்பதையும் இவ்வாய்வின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

**பிரதான சொற்கள்:** கல்வி, முன்பள்ளி, சிறார்கள், கற்றல், அடைவ

## 1. ஆய்வு அறிமுகம்

ஆரம்பப் பிள்ளைப் பருவ விருத்தி என்பது இன்று மிக முக்கியமாக வலியுறுத்தப்படும் துறையாக வளர்ச்சியடைந்துள்ளது. காரணம், பிள்ளையின் கற்றல் சார் செயற்பாடுகளுக்கு அடிப்படையாக இப்பருவமே காணப்படுகின்றது. ஆரம்பப் பிள்ளைப் பருவ வளர்ச்சியென்பது பிறப்புத் தொடக்கம் ஆறு வயதிற்கு உட்பட்ட பருவமாகும். இப்பருவத்திலே தான் முன்பள்ளிப் பருவக் கல்வியும் வருகின்றது. மூன்று வயது தொடக்கம் ஆறு வயதிற்கு உட்பட்ட சிறார்களே முன்பள்ளிப் பருவக் குழந்தைகள் என்பர். கற்றல் சார் செயற்பாடுகளில் பிற்கால வளர்ச்சியில் முன்பள்ளிக் கல்வி அத்திவாரக் கற்கையாக விளங்குகின்றது. கோறளைப்பற்று வடக்கு (வாகரை) பிரதேசம் என்பது கல்வியில் பின்தங்கிய பிரதேசமாகவும் தேசிய மட்டப் பரீட்சைகளின் அடைவுகளில் பின்தங்கிய நிலையிலே காணப்படுகின்றது. இத்தகைய தன்மைகளுக்கு அடிப்படைக் கல்வியான முன்பள்ளிப் பருவக் கல்வியும் மிகவும் பின்தங்கிக் காணப்படுவதைக் குறிப்பிடலாம். அங்குள்ள முன்பள்ளிகளைப் பொறுத்த வரை மிகவும் வசதிகள் குறைந்த நிலையிலும் கற்பித்தல் பணியில் ஈடுபடும் ஆசிரியர்கள் போதிய தகைமைகளோ தொழில் வாண்மையையோ கொண்டிருக்கவில்லை. இப்பிரதேச மாணவர்களுக்கு கற்றல் வாய்ப்பை வழங்குவதில் முன்பள்ளிகள் எத்தகைய சவால்களை எதிர்நோக்குகின்றன. இதில் பெற்றோர்கள், அரச சார்பு

To whom correspondence should be addressed: nithi1978@gmail.com

[114] Lecturer, Batticaloa National College of Education.

நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் எத்தகைய பங்களிப்புக்களை வழங்குகின்றன போன்ற விடங்களை ஆராய்வதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

**2. ஆய்வுப் பிரச்சினை**

கோறளைப்பற்று வடக்குப் பிரதேசம் கடந்த கால யுத்தத்தால மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசமாகும். கல்விசார் அடைவுகளிலும் பின்தங்கிய நிலையில் உள்ள பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் 20 அரசாங்க பாடசாலைகள் உள்ளன. எனினும் தரம் ஒன்றுக்கு சேர்க்கப்படும் மாணவர்கள் அனைவரும் முன்பள்ளிகளில் பயின்று செல்லும் நிலை காணப்படாதுள்ளது. மாணவர்களின் தேவைக்கேற்ப முன்பள்ளிகள் காணப்படாமையாகும். அத்துடன் மிகப் கஸ்டப் பிரதேசங்களைக் கொண்டுள்ள பாடசாலையாகையால் கற்பித்தல் பணியில் ஈடுபடுவதற்கான ஆசிரியர்கள் காணப்படாமையும் பிரதான குறைபாடாக உள்ளது. முன்பள்ளிகளில் பயின்று தரம் ஒன்றுக்குச் சேரும் போது பிள்ளைகளின் அறிகை வெளிப்பாடு பலமுள்ளதாகவும் நீடித்து நிலைத்திருப்பதற்கான அடித்தளமும் இடப்படுகின்றது. ஆனால் இப்பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் கற்கின்ற மாணவர்கள் நிறைய சவால்களை எதிர்நோக்குபவர்களாகவும் வாய்ப்புக்கள் குறைவாக உள்ளமையும் தமது கற்றலை மேற்கொள்வதில் இடையூறாக உள்ளது.

**3. ஆய்வு நோக்கங்கள்**

1. முன்பள்ளிகளை விருத்தி செய்வதில் பெற்றோர்களின் ஒத்துழைப்பு மற்றும் பங்குபற்றலை அறிந்து கொள்ளல்
2. அரசாங்க சார்பு அமைப்புக்களின் பங்களிப்பு எவ்வளவு தூரம் பயனுறுதி வாய்ந்ததாக அமைந்துள்ளது என்பதை இனங்காணல்
3. முன்பள்ளிகளின் விருத்தியில் இப்பிரதேசத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பினையும் பங்களிப்பினையும் அறிந்து கொள்ளல்.
4. முன்பள்ளிக் கல்வி விருத்தி இப்பிரதேசத்தில் எத்தகைய சூழ்நிலைக் காரணிகளால் சவால்களை எதிர்நோக்கியுள்ளது என்பதை இனங்காணல்.

4. **ஆய்வுப் பிரதேசம்**

இவ்வாய்வு கல்குடா கல்வி வலயத்தின் கோறளைப்பற்று வடக்குக் கோட்டம் ஆய்வுக்காக பயன்படுத்தபப்ட்டுள்ளது. கோறளைப்பற்று வடக்கு (வாகரை) கோட்டம் என்பது. மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கே திருகோணமலை மாவட்டத்தையும் கிழக்கே வங்கக் கடலையும் மேற்கே பொலநறுவை மாவட்டத்தையும் தெற்கே கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவையும் எல்லையாகக் கொண்ட பிரதேசமாகும்.

**5. ஆய்வின் வரையறை :**

இப்பிரதேசத்தில் உள்ள மொத்தம் 20 முன்பள்ளிப் பாடசாலைகளின் ஒவ்வொரு ஆசிரியர்களை தேர்ந்தெடுத்து அவர்கள் மூலமாகப் பெறப்பட்ட தரவுகள் ஆய்வுக்காகப் பயன்படுத்தப்பட்ள்ளது.

**6. இலக்கிய மீளாய்வு**

**ஆரம்பப் பிள்ளைப் பருவக் கல்வி**

ஒரு மனிதனின் வாழ்விலே முன்னோக்கிய மாற்றங்களும் எழு சிந்தனைகளும் ஏற்பட்டு ஒரு உயர்வான நிலையை நோக்கி நகர்த்துவதில் அடிப்படையாக இருப்பது ஆரம்பப் பிள்ளைப் பருவக் கல்வியாகும். இதனை ஆதாரக் கல்வி அல்லது அத்திவாரக் கல்வி எனவும் அழைப்பர். ஒரு குழந்தை கருவுற்றது முதலே கற்க ஆரம்பிக்கின்றது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். பிறந்த பின் உலகை தருசிக்கும் குழந்தை தன்னை உலகிற்குப் பொருத்தமானவராக ஆக்கிக்கொள்ளவும் நல்ல பழக்க வழக்கங்களைத்

தான் வாழும் சமூகத்தில் இருந்து பெற்றுக் கொள்ளவும் சமூகச் சூழல் வகை செய்கின்றது. பிறந்த குழந்தை தான் வாழும் சூழலில் இருந்தே அதிக விடயங்களைக் கற்றுக் கொள்கின்றது. எனவே, பிள்ளையின் சூழல் கற்பதற்குப் பொருத்தமாக வடிவமைக்கப்படல் வேண்டும்.

ஒரு மனிதனின் வளர்ச்சியிலே பிறந்தது முதல் ஆறு வயது வரையான காலம் மிக முக்கியமான காலம் என்பர். இக்காலத்திலே தான் பிள்ளையின் உடல், உள்ளம் ஆகியன விரைவாக வளர்ச்சியடைவதுடன், ஐம்பது வீதத்திற்கு மேற்பட்ட வளர்ச்சிகள் இக்காலத்திலே தான் நிகழ்கின்றது. எனவே, இப்பருவம் கவன ஈர்ப்புக்குள்ளான பருவம் எனலாம். இச்சந்தர்ப்பத்தில் பிள்ளையின் எதிர்கால வாழ்க்கையை ஒரு ஸ்திரமான நிலையில் பேண நல்ல போசனையும் நல்ல கற்றல் சூழலும் அமைவது அவசியம். ஆரம்பம் எவ்வாறு அமைகின்றதோ அது போலவே வளர்ந்த பின்னரும் அவனது பண்புகள் வெளிப்படும். இதனாலே தான் இப்பருவத்திலே ஊட்டப்படும் கற்றல் செயற்பாடுகள் பொருத்தமானதாகவும், நேர் நோக்கியதாகவும் இருப்பது அவசியம்.

பிறப்பு முதல் ஆறு வயது வரை உள்ள காலம் பொதுவாக குழந்தைப் பருவம் எனக் கூறுவர். இப்பருவம் மேலும் இரு வகைப்பட்டதாக இனங்காட்டுவர். பிறப்புத் தொடக்கம் மூன்று வயது வரையுள்ள காலம் அன்னை மடி பாடசாலைக் காலம் என்பர். இக்காலத்திலே குழந்தை தனது தாயின் அரவணைப்பிலே வாழும். பிள்ளையின் சகல தேவைகளும் அன்னையின் மூலமே நிறைவேற்றப்படுகின்றது. இக்காலத்தில் பிள்ளை தாயின் வழியிலே ஒவ்வொரு சூழல் தாக்கங்களையும் கற்றுக் கொள்கின்றது. தாயின் அரவணைப்பும், வழிகாட்டலும் இக்காலத்துப் பிள்ளையின் கல்விக்குத் துணை செய்கின்றது. படிப்படியாக உலகை விளங்கிக் கொள்ள முயற்சிக்கும் குழந்தைக்கு அன்னையே ஆசிரியராக இருந்து கற்றலுக்கு வாய்ப்பை வழங்குவதால் இதனை அன்னை மடிப் பாடசாலை என்பர்.

மூன்று வயது முதல் ஆறு வயது வரையுள்ள காலப்பகுதியே ஆரம்பப் பிள்ளைப் பருவக் கல்விக்கான காலம் ஆகும். இப்பருவத்திலே தனது வீட்டுச் சுற்றாடலுக்கு அப்பால் உறவினர் அல்லாத ஒருவர் மூலம் பிள்ளை கற்க ஆரம்பிக்கின்றது. இதனையே ஆரம்பப் பிள்ளைப் பருவக் கல்வி என்பர். அதாவது, 3 – 6 வயது வரையுள்ள காலப்பகுதியில் பிள்ளையின் உடல், உள்ளம், மொழி, கணிதம், அழகியல், ஆக்கத்திறன் சார்ந்த விருத்திகளை ஏற்படுத்தும் வகையில் இடம்பெறும் கல்வி முறைமையே ஆரம்பப் பிள்ளைப் பருவக் கல்வியாகும்.

ஆரம்பப் பிள்ளைப் பருவக் கல்வி பற்றி 2000 ஆண்டுகளுக்கு முன்பே பிளேட்டோ அதன் முக்கியத்துவத்தையும் குறிக்கோள்களையும் முன்வைத்துள்ளார். கல்வி என்னும் கோபுரத்திற்கு அடித்தளமாய் ஆரம்பமாய் முதற்படியாய் அத்திவாரமாய் ஆரம்பப் பிள்ளைப் பருவக்கல்வியே அமைகின்றது. ஆரம்பம் பிழையுறுமானால் பிள்ளையின் எதிர்காலம் நிச்சயமற்றதாக மாறும். இதனை ஆய்வுகள் மூலம் கண்டறிந்த அறிஞர்கள் இக்காலக் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றனர்.

இப்பருவத்திலே பிள்ளையின் மூளை வளர்ச்சியில் 50 வீதமானவை இடம்பெறுகின்றது. இது வேகமாக நிகழ்கின்றது. இதனாலே தான் அதிக கவனிப்புக்குள்ளான காலமாக கவனத்தில் கொள்ளப்படுகின்றது. ஐம்பது வீதமான வளர்ச்சி முறையாக இடம்பெற போதுமான போசனையும் கற்றல் வாய்ப்பினையும் வழங்குவது அவசியம். இதனாலே தான் ஐரோப்பிய நாடுகளில் ஆரம்பப் பிள்ளைப் பருவக் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

இப்பருவப் பிள்ளைகள் வளர்ந்தோரை விட வேறுபட்ட சுபாவங்கள், தேவைகள், இயற்றிறன்கள், நாட்டங்களைக் கொண்டவர்கள். அதன்வழி அவர்கள் பயிற்றுவிக்கப்படல் வேண்டும். ரூசோ, பெஸ்டலோசி, புரோபல், மொன்டிசோரி அம்மையார் முதலானோர் ஐரோப்பாவிலே ஆரம்பப் பிள்ளைப் பருவக் கல்வி வளர்ச்சிக்குப் பங்காற்றினர். பிள்ளையின் முக்கியத்துவம் இக்காலப்பகுதியில்

உணரப்பட்டமையே இதற்குக் காரணம் ஆகும். பிள்ளை பிள்ளையாகவே பார்க்கப்படல் வேண்டும். குழந்தையை ஒரு வளர்ந்தவராக பார்க்கக் கூடாது. பிள்ளையின் வளர்ச்சி, விருத்தி, முதிர்ச்சி முதலானவற்றுக்கு ஏற்ப இயல்பான வகையில் கற்றல் ஊட்டப்படல் வேண்டும் என்பதை இவர்களது கருத்துக்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.

**ஆரம்பப் பிள்ளைப் பருவக் கல்வியின் முக்கியத்துவங்கள்**

குழந்தையின் மூன்று வயது முதல் ஆறு வயது வரையான ஆரம்பப் பிள்ளைப் பருவக் காலமானது அடிப்படையான வளர்ச்சிக் காலமாகும். இக்காலத்திலே மூளை வளர்ச்சியில் ஐம்பது வீதமானவை வளர்ச்சியடைகின்றது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். எனவே, இப்பருவத்தில் கற்றலுக்கேற்ற நல்ல சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்து ஊக்குவித்து அவர்களைச் சிறந்த ஆளுமையுடையவர்களாக மாற்றுவதுடன், முழுவளர்ச்சியடைவதற்கான வாய்ப்பும் வழங்கப்படல் வேண்டும். இதனால் தான் இப்பருவம் பிள்ளைகளின் வளர்ச்சியில் முக்கிய பருவமாகக் கொள்ளப்படுகின்றது.

இக்காலத்திலே பிள்ளையின் உடல், உள, மனவெழுச்சி, சமூக விருத்தியை ஊக்குவிப்பதற்கு இக்கால கல்வி முறை அவசியம். இப்பருவத்திலே ஆராயும் ஊக்கமும், ஆக்கத்திறனும் உயர் மட்டத்திலே இடம்பெறுகின்றது. வினைத்திறனுடைய ஆரம்பப் பிள்ளைப் பருவத் திட்டத்தின் மூலம் பிறருடனான சமூகத் தொடர்புகள் விரிவடைகின்றன. ஊக்கமும் ஆக்கச் சிந்தனைத் திறனும் அதிகரிக்கின்றன. ஒரு தொடர்பாடல் திறனாக மொழி விருத்தியடைகின்றது. இப்பருவத்தில் இத்தகைய விருத்திகளை ஏற்படுத்திப் பொருத்தப்பாடு பெற இக்காலக் கல்வி அவசியம் ஆகும்.

வளர்ந்தோர் கல்வியில் இருந்து சிறார்களுக்கான கல்வி வேறுபட்டது. வளர்ந்தோர் கல்வியைத் தீர்மானிப்பதும் இப்பருவக் கல்வியே. இப்பருவக் கல்வி சிறப்புற அமையும் இடத்து எதிர்காலக் கற்றல் செயற்பாடுகள் அனைத்தும் செம்மையுற்றதாக அமையும்.

பிள்ளைகள் ஆரம்பக் கல்விப் பள்ளிகளுக்கு வருகின்ற போது ஏற்கனவே அவர்களது குடும்பம், நண்பர்கள், உறவினர்கள், அயலவர்களிடம் இருந்து கற்றுக் கொண்ட அனுபவங்களுடன் முன்பள்ளிக்கு வருகின்றார்கள். அவற்றை மற்றக் குழந்தைகளோடு பகிர்ந்து வலுவாக்கம் பெறுவதற்கு ஆரம்பப் பிள்ளைப் பருவக் கல்வி அவசியம் ஆகின்றது.

ஆரம்பப்பிள்ளைப் பருவப் பள்ளிகளிலே குழந்தைகள் ஏனைய குழந்தைகளுடன் உறவாடுவதன் மூலமும் விளையாடுவதன் மூலமும் தொடர்ந்து அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கான களமாக முன்பள்ளிகள் அமைந்து பிள்ளை ஆளுமையும் ஆரோக்கியமும் மேம்பாடடையச் செய்வதில் இவை முக்கியம் பெறுகின்றன. அத்துடன் வீட்டுச் சூழலை முன்பள்ளிகள் மாற்றி அவர்களைப் புத்துலகத்திற்கு வழிகாட்டும் களமாக அமைகின்றது.

சமூக மயமாக்கலுக்கு ஆரம்பப் பிள்ளைப் பருவப் பள்ளிகளே வழிகாட்டுகின்றன. சகபாடிகளுடன் உறவாடுவதன் மூலம் அவர்களின் மனப் பக்குவத்தையும் சிறப்பான வாழ்க்கை வாழ்வதற்கான முதல் பயிற்சிக்களமாகவும் இவை விளங்குகின்றன.

**7. ஆய்வு முறையியல்**

கோறளைப்பற்று வடக்கு பிரதேசத்திற்கு உட்பட்ட ஆரம்பப் பிள்ளைப் பருவச் சிறார்களின் கற்றல் வாய்ப்பை வழங்குவதில் முன்பள்ளிகள் எதிர்நோக்கும் சவால்கள் - ஓர் ஆய்வு என்னும் தலைப்பிலான இவ்வாய்வு ஒரு கள ஆய்வாக அமைந்துள்ளது. பண்புசார் ஆய்வு முறையியல், அளவுசார் ஆய்வு முறையியல் முதலானவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

**மாதிரி எடுத்தல்**

இவ்வாய்வானது கோறளைப்பற்று வடக்குக் கல்விக் கோட்டத்தை ஆய்வுப் பிரதேசமாகக் கொண்டுள்ளது. இப்பிரதேசத்தில் 20 முன்பள்ளிகள் அமைந்துள்ளன. 20 முன்பள்ளிகளும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இம்முன்பள்ளிகளின் ஒவ்வொரு ஆசிரியர் வீதம் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து மூலம் தரவுகள் பெறப்பட்டன. அத்துடன் இப்பிரதேச முன்பள்ளிக் கல்வி உத்தியோகத்தர் மூலமும் தரவுகள் பெறப்பட்டு இவ்வாய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**தரவு சேகரித்தல் முறை**

தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களிடம் வினாக்கொத்து – 1 மூலம் பெறப்பட்ட தரவுகள் இவ்வாய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்காகப் முன்பள்ளிகளின் தரவுகள் தொடர்பான மூன்று தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு 15 வினாக்கள் இடம்பெற்றுள்ளன. இதற்காகத் தெரிவு செய்யப்பட்ட் 20 முன்பள்ளிகள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பில் வினாக்கள் வழங்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டுள்ளன. ஒரு முன்பள்ளியில் இருந்து ஒரு ஆசிரியர் வீதம் தெரிவு செய்யப்பட்டு 15 வினாக்கள் வழங்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. முன்பள்ளிகளில் எல்லோரும் பெண்களே கற்பித்தல் பணியில் ஈடுபடுவதால் அனைவரும் பெண்களாக இடம்பெறுகின்றனர்.

நேர் காணல் முறை – முன்பள்ளிகளின் சவால்கள் தொடர்பில் கோறளைப்பற்று வடக்குப் பிரதேசத்திற்குப் பொறுப்பான முன்பள்ளிக் கல்வி அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் பெறப்பட்ட தரவுகள் இவ்வாய்வுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை இவ்வாய்வின் முதல் நிலைத் தரவுகளாக அமைந்துள்ளன.

**தரவு சேகரித்தல் நுட்ப முறை**

தரவு சேகரிப்பதற்காக இவ்வாய்விலே இரு வகையான வினாக்கொத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**வினாக்கொத்து**

இவ்வினாக் கொத்து மூலம் 20 முன்பள்ளிகளில் இருந்து 20 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. முன்பள்ளிகளின் அபிவிருத்தியில் பெற்றோர் பங்களிப்பு, அரச சார்பு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு தொடர்பில் மூன்று தலைப்பின் கீழ் 15 வினாக்களைக் கொண்டதாக அமைந்துள்ளது.

**நேர்முகம் காணல்**

கோறளைப்பற்று வடக்குப் பிரதேச முன்பள்ளிகளின் தற்போதைய நிலைமைகள் அவை எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பில் முன்பள்ளி கல்வி அபிவிருத்தி உத்தியோகத்தருடான நேர்காணல் மூலம் தரவுகள் பெறப்பட்டன. சவால்களை இனங்காண்பதற்கான வினாக்கள் அடங்கிய அட்டவணை பயன்படுத்தப்பட்டது.

**தரவுப் பகுப்பாய்வு நுட்ப முறைகள்**

இத்தரவுகளைப் பொருத்தமான கணித்தல் முறைகளைக் கொண்டு பகுப்பாய்வு செய்வதற்குப் பல நுட்ப முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இத்தரவுப் பகுப்பாய்விலே இருவிதமான அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

- பண்புசார் அணுகுமுறை
- அளவுசார் அணுகுமுறை

பண்புசார் அணுகுமுறையில் தரவு பகுப்பாய்வு செய்யும் போது சேகரிக்கப்பட்ட தரவுகளில் இருந்து பொதுவாகக் கருப்பொருளைக் கண்டறிதலும் இனங்காணப்பட்ட அம்சங்களிடையே தொடர்புகளை உருவாக்குதலும் இடம்பெறும். அளவுசார் அணுகுமுறையிலே சதவீதம் கணித்தல், தரவுகளை அட்டவணைப்படுத்தல், போன்ற விடயங்கள் முக்கியம் பெறுகின்றன. தரவுப் பகுப்பாய்வின் போது இவ்விரு முறைகளும் பயன்படுத்தப்படுகின்றன. பிரதான பகுப்பாய்வு நுட்பங்களாகத் தரவுகளை அட்டவணைப்படுத்தல், நூற்றுவீதம் கணித்தல் என்பன இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 8. பகுப்பாய்வு

**பெற்றோர்களின் பங்களிப்பு**

**அட்டவணை 0.1**

| | **பெற்றோர்களின் பங்களிப்பு** | முழுமையாக ஏற்ஏற்றுக்கொ ள்கின்றேன் | சராசரி | ஏற்றுக் கொள்கின்றே | சராசரி | முழுமையாக ஏற்றுக்கொள்ள வில்லை | சராசரி |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | பெற்றோர்களின் பங்களிப்பு போதுமானளவு கிடைக்கின்றது. | 00 | 00% | 02 | 10% | 18 | 90% |
| 02 | பெற்றோர்கள் பிள்ளைகளை முன்பள்ளிகளுக்கு முறையாக அனுப்புகின்றார்கள். | 00 | 00% | 06 | 30% | 14 | 70% |
| 03 | பெற்றோர்களுக்கு போதுமான பொருளாதார வசதிகள் உண்டு. | 00 | 00% | 04 | 20% | 16 | 80% |
| 04 | பெற்றோர்கள் முன்பள்ளிகளின் வளர்ச்சியில் தீவிர அக்கறை கொண்டு செயற்படுகின்றனர். | 02 | 10% | 06 | 30% | 12 | 60% |
| 05 | பெற்றோர்களுக்கு பிள்ளை விருத்தி தொடர்பில் போதிய தெளிவு உண்டு | 02 | 10% | 06 | 30% | 12 | 60% |

**ஆய்வு வினா : 01** பெற்றோர்களின் போதுமான பங்களிப்பு கிடைப்பது தொடர்பில் 20 மாதிரிகளில் 02 பேர் ஏற்றுக் கொண்டுள்ளனர். இது மொத்த மாதிரியில் 10% ஆகும். 18 பேர் முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. இது மொத்த மாதிரியில் 90% ஆகும். இதில் எவரும் இதனை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை.

**ஆய்வு வினா : 02** பெற்றோர் பிள்ளைகளை முறையாக அனுப்புதல் தொடர்பில் 20 மாதிரிகளில் 06 பேர் ஏற்றுக் கொண்டுள்ளனர். இது மொத்த மாதிரியில் 30% ஆகும். 14பேர் முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. இது மொத்த மாதிரியில் 70% ஆகும். இதிலும் எவரும் இதனை முழுமையாக ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிடவில்லை.

**ஆய்வு வினா : 03** பெற்றோருக்கு போதுமான வசதிகள் கிடைப்பது தொடர்பில் 20 மாதிரிகளில் 04 பேர் ஏற்றுக்கொளகின்றனர் . இது மொத்த மாதிரியில் 20% ஆகும். 16 பேர் முழுமயைாக ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். இது மொத்த மாதியில் 80% ஆகும்.

**ஆய்வு வினா : 04** பெற்றோர்கள் முன்பள்ளி வளர்ச்சியைில் தீவிர ஆக்கறை கொண்டுள்ளமை தொடர்பில் 20 மாதிரிகளில் 02 பேர் முழுமையாக ஏற்றுக் கொள்ள மறுகின்றனர். இது மொத்த மாதிரியில் 10% ஆகும். 06 பேர் ஏற்றுக் கொள்கின்றனர். இது மொத்த மாதிரியில் 30% ஆகும். இதில் 12 பேர் முழுமையாக ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். இது மொத்த மாதிரியில் 60% ஆகும்.

**ஆய்வு வினா : 05** பெற்றோர்களுக்குப் பிள்ளை விருத்தி தொடர்பில் போதிய தெளிவுண்டு என்பது தொடர்பில் 20 மாதிரியில் 02 முழுமையாக ஏற்றுக்கொள்கின்றனர். 06 பேர் ஏற்றுக் கொள்கின்றனர். 12 பேர் முழுமையாக ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர் . இது மொத்த மாதிரியில் 10%, 30%, 60% முறையே காட்டுகின்றது.

முன்பள்ளிகளின் செயற்பாடுகளில் பெற்றோர்களின் பங்களிப்பினைப் பார்க்கும் போது சராசரியாக பெற்றோர்களின் முழுமையான பங்களிப்பு 04% உம் ஏற்றுக்கொள்ளும் நிலை 40% ம் மிகுதி 56% பெற்றோர்களின் பங்களிப்பு போதுமானதாகக் கிடைப்பதில்லை என்பதனையே இத்தகவல் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இதன்படி பெரும்பான்மை முடிவு பெற்றோர்களின் பங்களிப்பு போதுமானதாகக் கிடைப்பதில்லை என்பதையே அறிந்து கொள்ள முடிகின்றது.

**அரச சாரபற்ற அமைப்புக்களின் பங்களிப்பு**

**அட்டவணை 0.2**

| | **அரச சாரபற்ற அமைப்புக்களின் பங்களிப்பு** | முழுமைமயாக ஏற்ஏற்றுக்கொள்கின்றேன் | சராசரி | ஏற்றுக் கொள்கின்றேன் | சராசரரி | முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை | சராசரி |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு ஏற்ப போதுமான கட்டிட வசதிகளை அரச அரச சார்பற்ற அமைப்புக்கள் வழங்கியுள்ளன. | 00 | 00% | 04 | 20% | 16 | 80% |
| 02 | ஆசிரியர்களுக்கு சம்பளங்கள் வழங்குவதில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு திருப்திகரமாக உள்ளது. | 00 | 00% | 04 | 20% | 16 | 80% |
| 03 | இவை மாணவர்களின் கற்றலுக்கான உபகரணங்களை வழங்குகின்றன | 00 | 00% | 08 | 40% | 12 | 60% |
| 04 | இவை தமது மேற்பார்வையின் கீழ் சகல வசதிகளையும் வழங்குகின்றன. | 02 | 10% | 04 | 20% | 14 | 70% |
| 05 | மாணவர்களின் கற்றல் சார் செயற்பாடுகளை ஊக்குவிப்பதில் தாராளமாக நிதி உதவிகளை வழங்குகின்றன. | 00 | 00% | 00 | 00% | 20 | 100% |

**ஆய்வு வினா : 01** மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு ஏற்ப போதுமான கட்டிட வசதிகளை வழங்கியுள்ளமை தொடர்பில் 20 மாதிரிகளில் 04 பேர் ஏற்றுக் கொண்டுள்ளனர். இது மொத்த மாதிரியில் 20% ஆகும். 16 பேர் முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. இது மொத்த மாதிரியில் 80% ஆகும். இதில் எவரும் இதனை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை.

**ஆய்வு வினா : 02** ஆசிரியர்களுக்கு சம்பளங்கள் வழங்குவதில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு திருப்திகரமாக உள்ளமை தொடர்பில் 20 மாதிரிகளில் 06 பேர் ஏற்றுக் கொண்டுள்ளனர். இது மொத்த மாதிரியில் 30% ஆகும். 14பேர் முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. இது மொத்த மாதிரியில் 70% ஆகும். இதிலும் எவரும் இதனை முழுமையாக ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிடவில்லை.

**ஆய்வு வினா : 03** இவை மாணவர்களின் கற்றலுக்கான உபகரணங்களை வழங்குகின்றமை தொடர்பில் 20 மாதிரிகளில் 08 பேர் ஏற்றுக்கொளகின்றனர் . இது மொத்த மாதிரியில் 40% ஆகும். 12 பேர் முழுமயைாக ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். இது மொத்த மாதிரியில் 60% ஆகும். இதில் எவரும் முழுமையாக ஏற்றுக் கொள்வதாகக் குறிப்பிடவில்லை.

**ஆய்வு வினா : 04** இவை தமது மேற்பார்வையின் கீழ் சகல வசதிகளையும் வழங்குகின்றமை தொடர்பில் 20 மாதிரிகளில் 02 பேர் முழுமையாக ஏற்றுக் கொள்ள மறுகின்றனர். இது மொத்த மாதிரியில் 10% ஆகும். 04 பேர் ஏற்றுக் கொள்கின்றனர். இது மொத்த மாதிரியில் 20% ஆகும். இதில் 14 பேர் முழுமையாக ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். இது மொத்த மாதிரியில் 70% ஆகும்.

**ஆய்வு வினா : 05** மாணவர்களின் கற்றல் சார் செயற்பாடுகளை ஊக்குவிப்பதில் தாராளமாக நிதி உதவிகளை வழங்குகின்றமை தொடர்பில் 20 மாதிரியில் 20 பேரும் முழுமையாக ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். இவ்விடயம் தொடர்பில் எவரும் முழுமையாக ஏற்றுக்கொள்ளவோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முன்பள்ளிகளின் விருத்தி தொடர்பில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பினை இதன்படி நோக்கும் போது 78% ஆனோரின் கருத்துக்கள் முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாது என்பதையே

குறிப்பிட்டுள்ளனர். 20% ஆனோர் ஏற்றுக்கொள்வதாகவும் 02% ஆனோர் முழுமையாக ஏற்றுக்கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளனர். இதன்படி பார்ப்பின் அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு இப்பகுதியில் திருப்திகரமாக அமைந்திருக்கவில்லை என்பதைக் குறிப்பிடலாம்.

**அரசு சார் அமைப்புக்களின் பங்களிப்பு**

**அட்டவணை 0.3**

| | அரசு சார் அமைப்புக்களின் பங்களிப்பு | முழுமையாக ஏற்ஏற்றுக்கொள்கின்றேன் | சராசரி | ஏற்றுக் கொள்கின்றேன் | சராசரி | முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை | சராசரி |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | போதுமானளவு கட்டட பௌதீக வள விருத்திக்கு உதவி செய்கின்றன. | 00 | 00% | 04 | 20% | 16 | 80% |
| 02 | முன்பள்ளி மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை முறையாக அமுல்படுத்தல் | 02 | 10% | 06 | 30% | 12 | 60% |
| 03 | அரச நிறுவனங்கள் மூலமான மேற்பார்வை சிறப்பாக அமைந்துள்ளது. | 00 | 00% | 08 | 40% | 12 | 60% |
| 04 | மாணவர்களை முன்பள்ளிகளில் சேர்ப்பதில் ஊக்கம் செலுத்துவதில் அரச சார் நிறுவனங்களின் பங்களிப்பு திருப்திகரமாக உள்ளது. | 02 | 10% | 06 | 30% | 12 | 70% |
| 05 | அனைத்து முன்பள்ளி மாணவர்களையும் முன்பள்ளிகளில் சேர்ப்பதில் அரசு சார் அமைப்புக்கள் அக்கறை காட்டுகின்றன. | 00 | 00% | 02 | 10% | 18 | 90% |

**ஆய்வு வினா : 01** போதுமானளவு கட்டட பௌதீக வள விருத்திக்கு உதவி செய்கின்றமை தொடர்பில் 20 மாதிரிகளில் 04 பேர் ஏற்றுக் கொண்டுள்ளனர். இது மொத்த மாதிரியில் 20% ஆகும். 16 பேர் முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. இது மொத்த மாதிரியில் 80% ஆகும். இதில் எவரும் இதனை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை.

**ஆய்வு வினா : 02** முன்பள்ளி மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை முறையாக அமுல்படுத்தல் தொடர்பில் 20 மாதிரிகளில் 02 பேர் முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளனர். இது மொத்த மாதிரியில் 10% ஆகும். 06 பேர் ஏற்றுக்கொள்கின்றனர். இது மொத்த மாதிரியில் 30% ஆகும். 12பேர் முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. இது மொத்த மாதிரியல் 60% ஆகும்.

**ஆய்வு வினா : 03** அரச நிறுவனங்கள் மூலமான மேற்பார்வை சிறப்பாக அமைந்துள்ளமை தொடர்பில் 20 மாதிரிகளில் 08 பேர் ஏற்றுக்கொளகின்றனர் . இது மொத்த மாதிரியில் 40% ஆகும். 12 பேர் முழுமயையாக ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். இது மொத்த மாதியில் 60% ஆகும். இதில் எவரும் முழுமையாக ஏற்றுக் கொள்வதாகக் குறிப்பிடவில்லை.

**ஆய்வு வினா : 04** மாணவர்களை முன்பள்ளிகளில் சேர்ப்பதில் ஊக்கம் செலுத்துவதில் அரச சார் நிறுவனங்களின் பங்களிப்பு திருப்திகரமாக உள்ளமை தொடர்பில் 20 மாதிரிகளில் 02 பேர் முழுமையாக ஏற்றுக் கொள்ள கின்றனர். இது மொத்த மாதிரியில் 10% ஆகும். 06 பேர் ஏற்றுக் கொள்கின்றனர். இது மொத்த மாதிரியில் 30% ஆகும். இதில் 12 பேர் முழுமையாக ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். இது மொத்த மாதிரியில் 60% ஆகும்.

**ஆய்வு வினா : 05** அனைத்து முன்பள்ளி மாணவர்களையும் முன்பள்ளிகளில் சேர்ப்பதில் அரசு சார் அமைப்புக்கள் அக்கறை காட்டுகின்றமை தொடர்பில் 20 மாதிரியில் 02 பேர் ஏற்றுக்கொள்கின்றனர். இது

மொத்த மாதிரியில் 10% ஆகும். 18 பேர் முழுமையாக ஏற்றுக்கொள்ள மறுகின்றனர். இது மொத்த மாதிரியில் 90% ஆகும்.

இப்பிரதேசத்தில் அரச சார்பு நிறுவனங்களின் பங்களிப்பினை நோக்கும் போது 72% கருத்துப்படி திருப்திகரமாக இல்லாத நிலையினையே காட்டுகின்றது. 26 % ஆனோர் ஏற்றுக் கொள்ளும் அதேவேளை 04% ஆனோர் முழுமையான பங்களிப்பு உண்டு என்பதை வெளிப்படுத்துகின்றனர். அரச சார்பு நிறுவனங்களின் பங்களிப்பும் இப்பிரதேசத்தில் போதுமானளவு அமைந்திருக்கவில்லை என்பதையே காட்டுகின்றது.

முன்பள்ளிகளின் விருத்திகள் தொடர்பில் சிறுவர் செயலகத்தின் கீழ் இப்பிரதேசத்தில் செயற்படும் ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தருடனான நேர்காணல் மூலம் இப்பிரதேச முன்பள்ளிகள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பில் நேர்காணல் மூலம் தரவுகள் பெறப்பட்டன. இவர் மூலமாகப் பெற்ற தரவுகளைத் தொகுத்துக் குறிப்பிடும் போது பின்வரும் விடயங்களை முன்வைக்க முடியும்.

1. இப்பிரதேசத்தில் வாழும் 60% மேற்பட்ட பெற்றோர்கள் படிப்பறிவு குறைந்தவர்களாகக் காணப்படுகின்றமை காரணத்தால் பிள்ளைகளை முன்பள்ளிகளில் சேர்க்க வேண்டும் என்ற அக்கறை இன்றிச் செயற்படுதைக் காண முடிகின்றது.
2. முன்பள்ளிகளை விருத்தி செய்தல் தொடர்பில் ஒன்றுக்கு மேற்பட்ட அமைப்புக்களின் பங்களிப்புக் காணப்படுவதால் ஒரு திட்டத்தின் கீழ் ஒழுங்குபடுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.
3. அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிலையான செயற்பாடுகளை உள்ளடக்கியதாக இல்லை. இவற்றின் செயற்பாடுகளை நோக்கும் போது தற்காலிக வேலைத் திட்டங்களாகவே அமைந்துள்ளன. இதன் மூலம் நிரந்தர மாற்றங்களை எதிர்பார்க்க முடியாத நிலை காணப்படுகின்றன.
4. சமூகக் குடியிருப்புக்கள் மிக தூரமாகக் காணப்படுவதாலும் பெற்றோர்கள் பிள்ளைகளை முன்பள்ளிகளில் சேர்ப்பதற்கு முயற்சிப்பதில்லை.
5. இப்பிரதேச பெற்றோர்களின் பொருளாதாரம் மிக மந்தநிலையில் காணப்படுவதால் பிள்ளைகளின் கல்வி தொடர்பில் அக்கறையற்றவர்களாக இருப்பதைக் காண முடிகின்றது.

## 9. ஆய்வு முடிவு

**1.** முன்பள்ளிகளை விருத்தி செய்வதில பெற்றோர்களின் பங்களிப்பு மிக இன்றியமையாததாகும். இப்பிரதேசத்தில் வாழும் பெற்றோர்கள் படிப்பறிவு குறைந்தவர்களாகக் காணப்படுவதும் வசதிகள் குறைந்த பின்தங்கிய பிரதேசமாகக் காணப்படுவதனாலும் பெற்றோர்களின் பொருளாதாரம் பலவீனமாகக் காணப்படுவதும் பெற்றோர்களின் பங்களிப்புக் குன்றியிருக்க அடிப்படையாகும். ஆய்வின் படி முன்பள்ளிகளின் விருத்தியில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டோரில் 56% கருத்துப்படி பெற்றோர்களின் பங்களிப்பு போதுமானதாக இல்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளனர்.

**2.** அரச சார்பற்ற அமைப்புக்கள் குறிப்பிட்ட பிரதேசத்தில் முன்பள்ளிகளுக்கு உதவிகளைக் செய்தாலும நிரந்தரத் தன்மை கொண்டதாக நீடித்து இருக்கத் தக்க வகையில் அவற்றின் பங்களிப்பு போதுமானதாக அமைந்திருக்கவில்லை என்பதை 78% ஆனோரின் கருத்து வெளிப்படுத்துவதைக் காணலாம்.

**3.** அரச சார்பு நிறுவனங்களின் பங்களிப்பும் திருப்திகரமான நிலையில் இல்லாமையையே வெளிப்படுத்துகின்றது. ஆய்வுக்குட்படுத்தப்பட்டோரில் 72% ஆனோரின் கருத்துப்படி அரசசார்பு நிறுவனங்களின் பங்களிப்புப் போதுமானதாக இல்லை என்பதையே அறிந்து கொள்ள முடிகின்றது.

**4.** இப்பிரதேச முன்பள்ளிகள் எதிர்நோக்கும் சவால்களாக பெரும்பான்மையான பெற்றோர் படிப்பறிவு குறைந்தவர்களாக இருத்தல் முன்பள்ளிகளில் பல்வேறு அமைப்புக்களின் தலையீடுகள் அரச அரச சார்பற்ற அமைப்புக்களின் செயற்பாடுகள் குறித்த ஒழுங்கமைப்பில் இடம்பெறாமை சமூகக் குடியிருப்புக்கள் முன்பள்ளியில் இருந்து தூரமானதாக இருத்தல் பெற்றோர்களின் பொருளாதார மந்த நிலை போன்றவை முன்பள்ளிகள் எதிர்நோக்கும் பிரதான சவால்களாக இனங்காண முடியும்.

## 10. விதப்புரைகள்

**1.** முன்பள்ளிகளின் விருத்தி தொடர்பில் பெற்றோர்களுக்குப் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். அதன் மூலம் பெற்றோர்கள் மத்தியில் சிறார் கல்வி தொடர்பில் தெளிவான சிந்தனையை நிலை நிறுவத்துவதற்கான திட்டமிட்ட செயற்பாடுகளை முன்னெடுத்தல் வேண்டும்.

**2.** முன்பள்ளிகளைத் தேசிய திட்டத்தின் கீழ் செயற்படுவதற்கான நடைமுறைகளை ஏற்படுத்துதல் வேண்டும்.

**3.** அரச அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு தொடர்பில் ஒரு முறையான வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

**4.** முன்பள்ளி சிறார்களின் கல்வியை ஊக்குவிப்பதற்கு முன்னோடியாக அப்பகுதி மக்களின் அடிப்படை வாழ்வாதாரப் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்க்க முனைய வேண்டும்.

5. முன்பள்ளிகளில் கற்பித்தல் பணியில் ஈடுபடும் ஆசிரியர்கள் கல்வித் தகைமையும் தொழிற்றகமையும் கொண்டவர்களாக இருத்தலை ஊக்கப்படுத்த வேண்டும்.

## 11. உசாத்துணை நூல்கள்


1. பங்கஜம் G, (2007), பள்ளி முன்பருவக் கல்வி, சாரதா பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை.
2. ஜெயராசா சபா,(2005), குழந்தை உளவியலும் கல்வியும், பூபாலசிங்கம் புத்தகசாலை, கொழும்பு.
3. செல்வராஜா மா,(2006), முன்பள்ளிக் கல்வி, கௌரி வெளியீட்டு இல்லம், கல்லடி, மட்டக்களப்பு.
4. தனபாலன் பா,(2009), பாலர் கல்வியும் நவீன செல்நெறிகளும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
5. அருளானந்தம், (2012),முன்பள்ளிக் கல்வி கற்றற் செயற்பாடு, அருள் வெளியீட்டகம், திருகோணமலை.
6. சந்தானம் எஸ், கணபதி வீ,(1995) கல்வி மனவியலும் குழந்தைக் கல்வியும், சாந்தா பப்பளிசர்ஸ், இராயப்பேட்டை, சென்னை.
7. சேதுபதி (2007), கல்வியும் குழந்தைகளும், பாவை பப்பிளிகேசன், இராயப்பேட்டை,சென்னை.